[1972 நவம்பர் 13

Hindi Pandits

* 270 Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether arrangements have been made for in-service training of Hindi Pandits who have passed the S.S.L.C. Examination in pursuance of G.O. No. 477, dated 6th April 1968; and

(b) if so, at what centres?

இந்தி பண்டிதர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 6—4—1968 நாளிட்ட 477-ம் எண் அரசு ஆணைக்கிணங்க எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்ற இந்தி பண்டிதர்களுக்கு பணி யிருப்புப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், எந்தெந்த இடங்களில் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அவை முன் ஓர் அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி : 6—4—1968-ல் எஸ்.எஸ்.எல்.சி. தேருமலிருக்கிற ஆசிரியர்களுக்கு அட்டெண்டர் பதவி கொடுக்கப் பட்டது. இந்த அடெண்டர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருக்கிறார் கள். இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா அல்லது அவர்களுக்கு செகண்டரி கிரேடு தருவதற்கு அரசு அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தகுதி பெறுவதற்கு 5 ஆண்டு காலம் வழங்கப்பட் டிருக்கிறது. அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தகுதியும் பெற்று விளங்கு வார்களானால், அவர்களுக்கு 3 மாத காலம் பயிற்சி பெறுவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

@ 58–59 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.